கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89/2024**

2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் /எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 6 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபா | வயது | 44 |
| தந்தை பெயர் | ரெங்கசாமி | ஜாதி | |
| தொழில் | உதவி மருத்துவர் , திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

(1 வது எதிரி ஆஜர் 2,3 எதிரிகள் ஆஜரில் இல்லை. 2,3 எதிரிகள் சார்பாக குவிமுச 317 -ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்பொழுது திருவாரூர் , அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 13.07.2019 ம் தேதி இரவு 10.00 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, 48 வயதுடைய செந்தில் குமார் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய உதவி ஆய்வாளர் விக்னேஷ் என்பவர் அழைத்து வந்தார் . மேற்படி செந்தில்குமார் குடிபோதையில் உள்ளாரா என்பது குறித்து பரிசோதனை செய்யும்படி கேட்டுக்கொண்டார் . நான் அவரை பரிசோதனை செய்தபோது மேற்கூறிய நபர் சுய நினைவுடன் காணப்பட்டார் . அவரை பரிசோதணை செய்ததில் அவர் குடிபோதையில் இருந்தார். குடிபோதைக்கான தாக்கம் காணப்படவில்லை. இது குறித்து நான் சான்று வழங்கினேன் . (**அந்த சான்று அசா .ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**) போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 வது எதிரிக்கு என்ன வகையான பரிசோதனை செய்யப்பட்டது என்று நான் வழங்கிய சான்றில் உள்ளதா என்றால் கிளினிக்கல் examination வெளிப்புற தோற்றத்தை மட்டும் வைத்து சான்று வழங்கினேன். இரத்த மாதிரி மற்றும் சிறுநீர் மாதிரி பரிசோதனை 1 வது எதிரிக்கு மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரிதான் . என்னிடம் ஒரு நபருக்கு மட்டும் தான் பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டது என்றால் சரிதான் . எத்தனால்

ஆல்கஹால் வகையை சேர்ந்தது என்றால் சரிதான் . எத்தனால் இருமல் மருந்தில் இருக்கும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.04.23 17:52:11 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 89/2024**

2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் /எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 7 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம் | வயது | 55 |
| தந்தை பெயர் | பொன்னுசாமி | ஜாதி | |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் , திருவாரூர் தாலுக்கா காவல் நிலையம் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

(1 வது எதிரி ஆஜர் 2,3 எதிரிகள் ஆஜரில் இல்லை. 2,3 எதிரிகள் சார்பாக குவிமுச 317 -ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2019 ம் தேதி திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது எங்கள் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரியும் ராஜராமன் என்பவர் அன்றைய தினம் 14.00 மணியிலிருந்து கானூர் செக் போஸ்ட் அலுவலில் இருந்தபோது 17.00 மணிக்கு வாகன தணிக்கை செய்தபோது தன்னை மூன்று நபர்கள் குடிபோதையில் தனது பணியை செய்யவிடாமல் தடுத்து தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 312/2019 ச/பி. 294(பி), 353, 506(2) இதசவின் கீழ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) இத்துடன் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இருந்த 2 மணிநேரம் காலதாமதமாக தான் புகார் கொடுக்கபட்டது என்றால் சரிதான். எதிரிகள் பிரச்சனை செய்ததால் எதிரிகளுடன் புகார்தாரர் நிலையம் வருவதில் காலதாமதம் ஏற்பட்டது . புகார்தாரர் எனது உடன் பணிபுரியும் காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். புகார்தாரரும் எதிரியும் சேர்ந்து தான் காவல் நிலையம் வந்தார்கள். அவர்களுடன் மேலும் சில காவலர்கள் நிலையம் வந்தார்கள். சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் இடத்தில் கண்காணிப்பு கேமரா உள்ளதா என்றால் அப்போது இல்லை. அப்போது காண்காணிப்பு கேமரா இருந்தது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரானது எங்கு எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் புகார் பெறப்படவில்லை,சம்பவம் நடபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கு ம் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவரிடம் சென்று எதிரிக்கான சான்று பெற்று வருவதில்  காலதாமதம் ஏற்பட்டதால் முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யபட்டது.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.04.23 17:52:21 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்.